# சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தோணித்துறை வழிகள், நீர்வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்

**(இனம் - 13)**

01. தமிழ்நாடானது நல்ல பின்னலமைப்புப் போன்ற சாலைகளைக் கொண்டுள்ளது. 1960–61 ஆம் ஆண்டு சதுர மீட்டர் ஒன்றுக்கு சாலை நீளத்தின் செறிவு 33.30 கிலோ மீட்டராக இருந்தது. 1993–94ஆம் ஆண்டு 132.45 கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது. 1996 ஏப்ரல் திங்களில் தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ.), மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ.), மாவட்டப் பெருஞ்சாலைகள் (மா.பெ.சா.), இதர மாவட்டச் சாலைகள் (இ.மா.சா.), ஊராட்சிச் சாலைகள் (ஊ.சா.) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் (ஊ.ஒ.சா.), நகராட்சி, பொதுப் பணித்துறை மற்றும் இதர சாலைகள் ஆகிய சாலைகளின் மொத்த நீளம் 1,72,409 கிலோ மீட்டர்கள் ஆகும். தனித்தனியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் எண். | சாலைகளின் வகை | | கிலோ மீட்டரில் நீளம் |
|---|---|---|---|
| 1. | தேசீய நெடுஞ்சாலைகள் (தே.நெ.) | | 2002 * |
| 2. | மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ.) | | 1933 * |
| 3. | மாவட்டப் பெருஞ்சாலைகள் (பெ.மா.சா.) | | 13973 * |
| 4. | இதர மாவட்டச் சாலைகள் (இ.மா.சா) | | 37962 * |
| 5. | கரும்புச் சாலைகள் | | 1132 * |
| 6. | ஊராட்சி ஒன்றியச் சாலைகள் (ஊ.ஒ.சா.) | | 38100 ** |
| 7. | ஊராட்சிச் சாலைகள் (ஊ.சா.) | 29020 | 51634 ** |
| 8. | இதர ஊராட்சிச் சாலைகள் | 22614 | |
| 9. | நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சாலைகள் | | 8689 * |
| 10. | பாசனச் சாலைகள் | | 1332 * |
| 11. | காட்டுச் சாலைகள் | | 3324 * |
| 12. | தமிழ்நாடு மின்வாரியச் சாலைகள் | | 679 * |
| 13. | இதர சாலைகள் (வகைப்படுத்தாதவை) | | 11649 * |
| | | மொத்தம் | 172409 |

* 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வெளியிடப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை செயல் நிறைவேற்ற வரவு செலவு மதிப்பீடு (1995–96) புள்ளி விவரத்தின் படி.

** 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித்துறை செயல் நிறைவேற்ற வரவு செலவு மதிப்பீடு புள்ளி விவரத்தின் படி.

02. புதிய சாலைகள் அமைத்து குறித்து தற்போதைய நிலை என்னவென்றால், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், இதர மாவட்டச் சாலைகள் மற்றும் சிறப்புச் சாலைத் திட்டங்கள் அதாவது கரும்புச் சாலைகள், போன்றவை வெளி உதவித் திட்டங்களின் கீழ் சாலைகளை அமைத்தல் ஆகியன மாநில நெடுஞ்சாலைகள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சாலைகளைப் பராமரிப்பது மாநில நெடுஞ்சாலைகள் துறையின் பொறுப்பாகும்.

03. ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், இணைப்புச் சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் உள்ளீட்டெல்லையின் கீழ் வரும் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி சாலைகள் அமைக்கும் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் செயற்படுத்துகின்றன. இப்பணிகளை மேற்கொள்வதற்காக மாநில நெடுஞ்சாலைகள் துறையிலிருந்து ஒன்றியப் பொறியாளர்கள் அயல்பணியில் அனுப்பப் பெறுகின்றனர். இச்சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். தற்பொழுது சாலைகள் அமைக்கும் பணியில் சிற்றூராட்சிகள் ஈடுபடுவதில்லை. இருந்தபோதிலும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளைப் போடுவதற்கும் பராமரிப்பதற்கும் போதிய அதிகாரங்களை அளிக்க வகை செய்யப் பெற்றுள்ளது. இன்றியமையாத் தன்மையின் அடிப்படையில் சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமையான சாலைகளாகும். சாலைகளை அமைப்பது பராமரிப்பது போன்ற சாலைப்பணிகளை மேற்கொள்வதில் அண்மையில் உருவாகிய மாவட்ட ஊராட்சிகளின் பங்கு என்னவென்று முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

04. சாலைகளில் மொத்த நீளமான 1,72,409 கிலோ மீட்டரில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளின் நீளம் 89,734 கிலோ மீட்டராகும். (இது மாநிலத்தின் மொத்த சாலை நீளத்தில் 52.04% ஆகும்) ஊர் நிலை உள்ளமைப்பு மேம்பாட்டில் இச்சாலைகளைப் பராமரிப்பதும் மேம்படுத்துவதும் மிக முக்கியமான பங்காகும். ஆனால் சுமார் 6000 கிலோ மீட்டர் சாலைகள் தான் (அதாவது மேற்கூறிய சாலைகளில் 10 விழுக்காடு) நல்ல நிலையில் உள்ளன. இது எதனைக் குறிக்கிறது என்றால் 90% அளவு மேலான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன என்பதையும், சீருந்துகள் செல்லும் சாலைகளாக ஆக்குவதற்கு அவற்றைத் தார்ச்சாலைகளாக ஆக்க வேண்டும் என்பதாகும்.

மேற்பரப்பின் தன்மைக்கேற்ப சாலை நீளங்கள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

**(நீளம் கிலோ மீட்டரில்)**

| தொடர் எண். (1) | மேற் பரப்பின் தன்மை (2) | ஊராட்சி ஒன்றியம் (3) | ஊராட்சி நீளம் (4) | மொத்தம் நீளம் (5) |
|---|---|---|---|---|
| 1. | மண்சாலை | 7537 (19.77) | 22282 (43.15) | 29819 (33.23) |
| 2. | சரளைக் கற்சாலை | 8209 (21.54) | 10865 (21.04) | 19074 (21.26) |
| 3. | ஒரடுக்குச் சரளைக்கல் பரவிய சாலை | 14154 (37.15) | 16298 (31.57) | 30453 (33.94) |
| 4. | இரு அடுக்குகளாகச் சரளைக் கல் பரவிய சாலை | 4398 (1.55) | – | 4398 (04.90) |
| 5. | தார்ச்சாலைகள் | 3618 (9.50) | 2188 (4.24) | 5806 (6.47) |
| 6. | சிமெட்டிச் சாலைகள் | 184 (0.40) | – | 184 (0.20) |
| | **மொத்தம்** | **38100 (100)** | **51634 (100)** | **89734 (100)** |

ஆதாரம் : 1996 ஆகஸ்ட் திங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் செயல் நிறைவேற்ற வரவு, செலவு மதிப்பீட்டின்படி.

05. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் மூன்று படிநிலை அமைப்பதற்கான அதிகாரங்களை ஒப்படைப்பதற்கான பரிந்துரைகளை செய்யும் முன்னர் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் சாலைகள் குறித்துச் சொல்லப்பட்ட சட்டப்படியான வழிவகைகள் குறித்து ஆராய்வது பொருத்தமானதாகும். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களால் சாலைகள் பராமரிக்கப்படுவது தொடர்பில் பின்வரும் வழிவகைகளை மேற்கொள்வதற்கு வகை செய்கிறது.

**ஊராட்சி**

(i) பின்வருவன தொடர்பில் ஊராட்சிகளுக்குச் சில வசதிகளைச் செய்வதற்கும் அதன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நியாயமான ஏற்பாடுகளைத் தனது நிதிவரம்பெல்லைக்குள் ஊராட்சிகள் செய்து முடிக்க 110 ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

அ) ஊரின் அனைத்துச் சாலைகளையும், அதாவது ஊரிலுள்ள அனைத்து பொதுச் சாலைகளையும் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என வகைப்படுத்தப்பட்டவை தவிர) அச்சாலை வழிகளில் அமைந்த பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள் தரைப்பாலங்கள் அனைத்தையும் அமைப்பது, பழுதுபார்ப்பது, பராமரிப்பது ஆகியன.

(ஆ) கட்டங்கள் அமைந்த பகுதிகளில் பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குகள் அமைப்பது.

(இ) வடிகால் அமைப்பது வடிகால் நீர் சாக்கடை நீரைச் சேர்க்காமல், பிற கழிவுநீர்க் குப்பைகளை அகற்றுவது.

(ii) பிரிவு 125இல் ஊராட்சிக்குச் குறிப்பிட்ட சில பொதுச் சாலைகளின் மீதான உரிமையை அளித்துள்ளதுடன் குறிப்பிட்ட சில சாலைகள் விடப்பட்டும் உள்ளன. இதற்கான வழிவகைகளைப் பின்வருமாறு காணலாம்.

பொதுச் சாலைகள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகள் என அரசால் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் தவிர ஏனைய சாலைகள் அவற்றிற்கான நடைபாதைகள், கற்கள், ஏனைய பொருள்கள் அதன் தொடர்பான பணிகள்,பொருள்கள், அதற்கென வழங்கப் பெற்ற பிற சாமான்கள் ஆகியவற்றுடன் வடிகால்கள், வடிகால் பணிகள், சுரங்கப் பாதைகள் சாலைகளின் பக்கங்களில் ஏற்படுத்துவது என எந்த ஒரு கிராமத்திலும் உள்ளவற்றை ஊராட்சிக்கு உரிமையாக்குவதுடன், இவற்றிற்கான செலவினங்கள் ஊராட்சியால் அல்லது வேறுவகையில் செய்யப் பெற்றிருந்தாலும், அல்லது அத்தகைய நிலையிலுள்ள சாலைகள், அவற்றிற்குத் தொடர்புடைய அனைத்துப் பொருள்கள், சாமான்களையும் அவ்வாறே உரிமையாக்குதல்.

இத்தகைய எந்தவொரு பொதுச் சாலையையும், வடிகால் அமைப்பையும், வடிகால் பணி, சுரங்கப்பாதை அல்லது சிறுபாலம் ஆகியவற்றை அமைப்பது பற்றிய இச்சட்டத்தை அரசானது அறிவிப்பின் மூலம் விளக்கலாம் ; மேலும் இத்தகைய அறிவிப்பினைத் திருத்தலாம் அல்லது நீக்கி விடலாம்.

**ஊராட்சி ஒன்றியம்**

(iii) பிரிவு 112–இன் படி ஊராட்சி ஒன்றியத்தின் கடமைகளை அதன் நிதி வரம்பிற்குள் சில வசதிகளை நியாயமான வழிமுறையில் செய்வதற்கு வகை செய்கிறது, அவை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொது சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலையாக வகைப்படுத்தபட்டுள்ளன. அனைத்தையும், அத்தகைய சாலைகளில் அமைந்துள்ள பாலங்கள்,

சிறுபாலங்கள். சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றையும் அமைக்க, பழுது பார்க்க, பராமரிக்க வசதிகள் அளித்தல்.

(iv) ஒன்றியமானது சில பொதுச் சாலைகளை உடைமையாக்கிக் கொள்வதற்கும் பராமரிப்பதற்கும் இச்சட்டத்தின் 126 ஆவது பிரிவு பின்வருமாறு உரிமை அளிக்கிறது.

(1) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என வகைப்படுத்துப்பட்ட எந்த ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள பொதுச் சாலைகள் அனைத்தும் அவற்றிற்கான நடைபாதைகள் கற்கள் ஏனைய பொருள்கள் அதன் தொடர்பான பணிகள், பொருள்கள், அதற்கென வழங்கப் பெற்ற பிற சாமான்கள் ஆகியவற்றுடன் வடிகால்கள். வடிகால் பணிகள், சுரங்கப்பாதைகள் சிறுபாதைகள் சாலைகளின் பக்கங்களில் ஏற்படுத்துவது என உள்ளவற்றை ஊராட்சி ஒன்றியத்திற்கு உரிமையாக்குவதுடன், இவற்றிற்கான செலவினங்கள் ஊராட்சி ஒன்றியத்தால் அல்லது வேறுவகையில் செய்யப்பட்டிருந்தாலும் சாலை நீளப்படுத்துவது அல்லது அத்தகைய நிலையிலுள்ள சாலைகள், அவற்றிற்குத் தொடர்புடைய அனைத்துப் பொருள்கள் சாமான்கள் ஆகியவற்றையும் அவ்வாறே உரிமையாக்குதல்.

(2) இத்தகைய எந்தவொரு பொதுச் சாலையையும் வடிகால் அமைப்பையும் வடிகால் பணி சுரங்கப்பாதை அல்லது சிறுபாலம் ஆகியவற்றை அமைப்பது பற்றிய இச்சட்டத்தை அரசானது அறிவிப்பின் மூலம் விலக்கலாம் ; மேலும், இத்தகைய அறிவிப்பினைத் திருத்தலாம் அல்லது நீக்கி விடலாம்.

## அரசின் சார்பாக பராமரிப்பு

(V) பிரிவு 125, 126 ஆகியவற்றிற்குக் கூடுதலாக 127 ஆவது பிரிவானது கீழே குறிப்பிட்ட வகையில் இத்தகைய சாலைகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சிகளுக்கு அனுமதி அளிப்பதற்கும் இதற்காகும் செலவினங்களை அளிப்பதற்கும் அரசுக்கு மேலும் அதிகாரங்களை அளிக்கிறது.

(அ) வடிகால் அமைப்பில் நீர்வசதி செய்தல் பராமரித்தல் ஆகியவற்றைச் செய்தல்.

(ஆ) வடிகால்களைப் பராமரிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும், வழிவகை செய்தல்.

(இ) அத்தகைய சாலையுடன் இணைக்கப்பட்ட நடைபாதையைப் பராமரித்தல் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்தல்.

(vi) ஒரு ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு உரிமையாக உள்ள பொதுச் சாலையிலுள்ள இடர்விளைவிக்கும் அமைப்பு மற்றும் சாலை ஓரத்திலுள்ள மரங்கள் சம்பந்தமாக சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரங்கள் 128, 129, 130 ஆகிய பிரிவுகளின் படி முறையே ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் உள்ளது.

(vii) பிரிவு 131–இன் படி கிராம நிருவாக அலுவலர்களின் கடமைகள் என்னவென்றால் செயலாட்சி அதிகாரி அல்லது ஆணையாளர் மற்றும் வருவாய் அதிகாரியிடம் ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி மன்றத்திற்கு உரிமையாகயுள்ள சாலைகளின் ஆக்கிரமிப்பை குறித்துத் தெரிவிப்பதுதாகும். தொடர்புடைய செயலாட்சி அலுவலர் அல்லது ஆணையாளரின் கடமை என்னவென்றால் அரசால் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளின்படி ஆக்கிரமிப்பை நீக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதாகும். செயலாட்சி அலுவலர் / ஆணையாளர் இத்தகைய ஆக்கிரமிப்பை நீக்குவதற்கு பாதுகாப்பிற்காக வருவாய்த் துறையின் உதவியை நாடலாம்.

(viii) ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் பொதுச் சாலைகளில் விற்பனை நடைபெறுவதைத் தடை செய்வதற்கு பிரிவு 151 இன் படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நிறுத்துமிடங்கள், வண்டி நிறுத்துமிடங்கள், மிதி வண்டி நிறுத்துமிடங்கள், இயக்கூர்திகள் நிறுத்துமிடங்கள் போன்றவற்றிற்கு வகை செய்யவும் தேவையான கட்டணங்களை விதிப்பதற்கும் 154 ஆம் பிரிவில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இச்சட்டத்தின் 154 ஆம்

பிரிவின்படி தனியார் நிறுத்துமிடத்தை ஏற்படுத்துவதைத் தடை செய்கிறது மேலும், 155–ஆவது பிரிவில் தனியார் நிறுத்துமிடங்களுக்கு ஊராட்சி ஒன்றியமானது உரிமம் அளிக்கவும், அதற்குரிய உரிமக் கட்டணத்தை விதிப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(ix) பிரிவு 236–இன்படி ஊராட்சிக்கு உரிமையாக உள்ள அல்லது ஊராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து சாலைகளையும் நீர் வழிகளையும் சாதி சமயம் வேறுபாடின்றி மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவும், துய்த்து மகிழவும் விடப்பட வேண்டும்.

**மாவட்ட ஊராட்சி**

(x) சட்டப் பிரிவு 163 இன் கீழ், மாவட்ட ஊராட்சியானது பொதுச் சாலைகளை ஊராட்சி ஒன்றியச் சாலை மற்றும் ஊராட்சிச் சாலைகள் என வகைப்படுத்துவது தொடர்பில் (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என அரசு வகைப்படுத்திய சாலைகள் தவிர), அரசுக்கு எடுத்துரைக்க அதிகாரம் பெற்றுள்ளது.

**அரசு உதவி**

(xi) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும், அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் தொகைக் கணக்குப்படி ஒவ்வொருவருக்கும் என அரசால் அறுதியிடப் பெற்ற அத்தகைய உள்ளாட்சிச் சாலைகள் மானியத்தை ஒவ்வோராண்டும் இச்சட்டத்தின் 182ஆம் பிரிவின் படி அரசு வழங்குகிறது. ஒவ்வொரு ஊராட்சியாலும் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் மற்றும் தன்மையின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கொடுக்கப்பட வேண்டிய உள்ளாட்சிச் சாலைகள் மானியத்தைச் சேகரிப்பதற்கான நடைமுறைகளுக்கும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சாலைகளின் பராமரிப்பிற்காக அத்தொகை பயன்படுத்தப்பட வேண்டும். இச்சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழ் ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியில் உள்ளாட்சிச் சாலைகள் மானியமாக பெறப்பட்ட மானியம் வரவு வைக்கப்பட வேண்டும்.

(xii) சட்டப்பிரிவு 242 (xxxiv,xxxv,xxxvi) இன் கீழ் பின்வருவன பற்றிக் குறிப்பான விதிகளை உருவாக்குவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது.

(அ) ஊராட்சிக்கு உரிமையாக உள்ள பொதுச் சாலைகளிலிருந்து ஆக்கிரமிப்பை அகற்றுதல். அச்சாலைகளுக்குச் சேதம் ஏற்படக் காரணமாக இருந்தவர்களால் சேதத்தைச் சரிபார்க்கச் செய்வது அல்லது அவரின் செலவில் சேதத்தைப் பழுது பார்ப்பது.

(ஆ) ஊராட்சியைச் சார்ந்த பொதுச் சாலைகளில் வளரும் மரங்களுக்குரிய உரிமைக் கோரிக்கை எதையும் தீர்மானித்தல்.

(இ) ஊராட்சியைச் சார்ந்த பொதுச் சாலைகளில் அனுமதி பெறாத குடியிருக்கைக்காக தண்டத்தொகை விதித்து பிடித்தம் செய்தல்.

06. அடிப்படை அளவுத் தேவைகளுக்கான திட்டங்களில் ஊரக சாலைகளின் மேம்பாடும் ஒன்றாகும், இதில் இந்திய அரசும் மாநில அரசும் மிகவும் முதன்மை அளிக்கின்றன. ஊரகச் சாலைகளின் மேம்பாடும் தற்போதைய முன்னேற்பாடுகளானது, உள்ளாட்சி சாலைகள் மானியத்திலிருந்து (உ.சா.மா.) பெறப்படும் குறைந்த நிதிகளிலிருந்து ஏறத்தாழ 90 விழுக்காடு சாலைகளைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் போதுமானதாக இல்லை என்பதை முந்திய பத்திகளிலிருந்து அறியலாம். இவ்வாறு, அதிக நீளமுடைய ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைக் கட்டமைப்பு மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் உள்ளதால் இதில் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் பயனுள்ள பங்கை ஆற்ற முடியும். சாலைகள் போன்ற உள்ளமைப்பானது ஊரக வளர்ச்சிக்குத் திறவு கோலாக உள்ளன. சிறப்பாகச்

செயலாற்றுவதற்கு ஒவ்வொரு நிலையிலும் பொறுப்புடன் ஒப்படைப்பு இன்றியமையாது பின்பற்றப்பட வேண்டிய அணுகு முறையை மாநிலத்திட்ட குழு மேற்கொள்கிறது. ஆனால் யார் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினாலும் தகவல் தொடர்பு வலைப்பின்னல் ஒழுங்கு முறையாகவும் உள்ளிணைப்பு முறையாகவும் இணைக்கப்பட வேண்டும். வான் தொடர்பு தொலைபுணர்வு, மற்றும் பிற முகமைகளிலிருந்து கிடைக்கக்கூடிய அறிவியல் தொழில் நுட்ப விவரங்களை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அந்தளவு பயன்படுத்தி முன்னேறிய திட்டமிடுதலைத் தொடங்கும் முயற்சிக்கான இப்பெரும் பொறுப்பு மாவட்ட ஊராட்சி எனப்படும் உயர்நிலை அமைப்பைச் சாரும். தவிர, பொறியாளர்களைக் குறிப்பாக மாவட்டங்களில் வசிக்கும் கட்டடப் பொறியாளர்களைக் (அரசுத் துறையில் பணியாற்றுபவர்கள் நீக்கலாக) கண்டறியவும் பட்டியலிட்டுக் காட்டவும் துணைபுரிபவராக இது செயற்படவும் கூடும். குறைந்த எண்ணிக்கையின் காரணமாக அல்லது பணிச்சுமையின் பொருட்டு அரசுப் பொறியாளர்கள் போதுமான அளவில் இல்லாத விடத்துத் தொடர்புடைய ஊராட்சிகளாலும் / ஊராட்சி ஒன்றியங்களாலும் தொழில் நுட்பப் பணிகளில் துணையாக இருப்பதற்கு இவர்களின் பணிகளைப் பெற முடியும். இப்பட்டியலிருந்து வல்லுநர்களை தொழில் முறைப் பணியாளர்களை தெரிவு செய்வது தொடர்புடைய ஊராட்சி அமைப்புகளிடம் விடப்பட்டுள்ளது. இருதரப்பிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க விதிமுறைகள் வரையறைகளின் அடிப்படையில், ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஊதிய விகிதத்தின் பேரில் அவர்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம். மாவட்ட ஊராட்சியின் மூன்றாவது பங்கானது செயல் திட்டங்களின் நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளால் மேற் கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் தரம் குறித்துத தனிப்பட்ட முறையில் தொழில் நுட்பப் பணிப்பட்டியலின் மூலம் மதிப்பிடுவதும் ஆகும். மதிப்பீட்டு அறிக்கைகள் அப்பகுதியிலுள்ள அனைத்து ஊராட்சி அமைப்புகளுக்கும் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் கிடைக்கும் படிச் செய்யவும் வேண்டும். மாவட்ட ஊராட்சியானது சாலைப் பின்னலமைப்பு தொடர்பில் அண்டை மாவட்டங்களும் மாநில அரசு அதிகாரிகளுடனும் ஒன்றுக்கொன்று சார்ந்து செயல்படுவதும், மாவட்டத்திற்காக விரிவு படுத்தப்பட்டத்தபட்ட திட்டங்களை மதிப்பீட்டு செய்வதும் தொடர்ந்து செய்து வருவது இன்றியமையாததாகும். அத்துடன் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பு பகுதியில் வராத, சாலைப் பணிகளின் தொடர்பில் மாநில அரசால் ஒப்படைப்புச் செய்யப்பட்ட பொறுப்புகளை மேற்கொள்வதற்கும் அல்லது பின்னலமைப்புத் தொடர்புகளை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதும் இன்றியமையாததாகும். அதற்கேற்ப, சாலைகளின் வகைப்பாடு, கட்டுமானம், மேம்பாடு பராமரிப்பு ஆகியவை தொடர்பில் பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஊராட்சி நிறுவனங்களின் 3 படிநிலை அமைப்புகளிடம் கொடுப்பதற்குப் பின்வரும் கருத்துக்கள் அளிக்கப்பெறுகின்றன.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சாலைப் பின்னலமைப்பு மேம்பாடும்அணுகஇயலும் தன்மையும். | (i) இணைப்பு சாலை, நடைபாதைகள், வடிகால் வசதிகளைக் கண்டறிதல் காணுதல். தன் சொந்த நிதியிலிருந்து அல்லது பல்வேறு திட்டங்களின் கீழிருந்தும் நிதியளிக்க வேண்டிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான திட்டத்தையும் ஆதாரத்தையும் காட்டுதல்; பின்னதன் நேர்வில் தொடர்புடைய முகமைகளிலிருந்து விடுவிக்கப்படும் நிதியைப் பெறுதல். |
| | (ii) இயலக்கூடிய தரம் மற்றும் கருதப்பட்டுள்ள பணிகளுக்கான செலவு பற்றி ஊராட்சி ஒன்றிய (பொறியாளர்கள்) திடமிருந்து தொழில் நுட்ப அறிவுரையைப் பெறுதல், தேவைப்படுமிடத்துக் குறிப்பிட்டத் திட்டங்களுக்குக் கட்டண அடிப்படையில் தனிப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்களைப் பணிக்கு அமர்த்துதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (iii) செயற்பட்டுவரும் பணிகளின் தரத்தைக் கண்காணித்தலும் மேற்பார்வையிடுதலும். |
| 2. இப்போதிருக்கும் சாலைகள் / சிறுபாலங்கள், பாலங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதலும் பராமரித்தலும். | (i) ஊராட்சிச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், நடைபாதைகள் வடிகால் அமைப்புகள் ஆகியவற்றுக்கான திட்டங்களைத் தீட்டுதல், மேம்படுத்த பழுது பார்ப்பதற்காகும் செலவினங்களையும் ஆண்டுதோறும் பராமரிப்பதற்காகவும் செலவுகளையும் மதிப்பிடுதல். |
| | (ii) ஊராட்சியின் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காகச் சொந்த வள ஆதாரங் களிலிருந்தும் அரசின் வன ஆதாரங் களிலிருந்தும் நிதியை அதிகரித்தல். |
| | (iii) ஊராட்சிச் சாலைப் பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுதல். |
| | (iv) ஊராட்சிச் சாலைகள் தவிர அரசால் பராமரிப்பு நிதி அளிக்கப்படும் அரசால் ஒப்படைக்கப்பட்ட சாலைகளின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளுதல் (பிரிவு 127) |
| 3. நீர் வழிகள் / தோணித் துறைப் பணிகள் முதலியவற்றை மேம்படுத்துதல். | (i) தேவைப்படுமிடத்தில் தோணித்துறை / அணைகரைகளை கட்டி, உரிமக் கட்டணத்தை விதித்துப் பராமரித்து வருதல். |
| 4. சாலைச் சுங்க வரி விதிப்பு | (i) ஊராட்சியானது சாலைகள் மற்றும் பாலங்களின் மேம்பாட்டிற்குப் போதிய அளவில் நிதிகளை செலவிட்ட விடத்து மூலதனம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்ட சாலை சுங்கத்தை விதித்தல். |
| 5. சாலைகளின் வகைப்பாடு | (i) ஊராட்சி ஒன்றியச் சாலை அல்லது உயர் வகைச்சாலை என்று வகைப்படுத்தப் பட வேண்டிய எந்த ஒரு ஊராட்சி சாலை குறித்தும் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கருத்துத் தெரிவித்தல். |
| 6. நிழல் தரும் மரங்கள் | (i) ஊராட்சிச் சாலைகளில் நிழல் தரு மரங்கள் / மலைத் தோட்டப் பயிர்களை அதிக அளவில் வளர்த்தல், இருந்து வரும் மரங்களைப் பராமரித்தல் அவற்றிலிருந்து தேவைப்படும் வருவாயைப் பெறுதல். |
| 7. சில பகுதிகளில் தண்டம் விதித்தல் | (i) ஊராட்சி சாலைகளுக்குத் தொடர்புடைய **1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டக் காப்புரைகளை மீறியமைக்கழகத் தண்டனை விதித்து அபராதத் தொகைகளைத் திரட்டுதல். (சட்டப்பிரிவுகள் **131, 151, 154, 155, 236** மற்றும் **245** உடன் படித்தறியப்பட்ட **II** மற்றும் **III** ஆம் அட்டவணை |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சாலைப்பின்னல் மேம்பாடும் அணுக இயலுந்தன்மையும் | (i) (குறும அளவுத்தேவைத் திட்டம் குறித்த அளவுகளின் படி) சாலைத் தொடர்பு தேவைப்படும் கிராமங்களைக் கண்ட –றிதல், மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளின் சாலைகளை இணைக்கும் சாலைகளையும் ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் கட்டுவதற்கான திட்டங்களை உருவாக்குதல். |
| | (ii) நில அளவை இயலக்கூடிய தொழில் நுட்பம் செய்தல், அறிந்து அளித்தல் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் கட்டு மானத்திற்குப் பல்வேறு திட்டங்களின் கீழும் அதன் சொந்த நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கி ஒப்பளிப்புச் செய்தல். |
| | (iii) ஊராட்சிகளால் கருதப்பட்ட சாலை கட்டுமானப் பணிகளுக்கும் பராமரிப்புப் பணிகளுக்கும் தொழில்நுட்ப உதவி அளித்தல். |
| | (iv) சாலை/பாலங்களின் விவரக் குறிப்பீடுகளைக் கண்காணித்து பணியின் தரத்தை மேற்பார்வையிடுதல் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல். |
| 2. இப்போதிருக்கும் சாலைகள் / சிறுபாலங்கள், பாலங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதலும் பராமரித்தலும். | (i) சாதாரண ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தார்ச் சாலைகளாக இயக்கூர்தி வாகனங்கள் செல்லும் சாலைகளாக மாற்றுதல். |
| | (ii) ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சிறுபாலங்கள், பாலங்களை ஆண்டுக் கொரு முறை பழுது பார்த்துப் பராமரித்தல். |
| | (iii) ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பணி ஒதுக்கீட்டிற்கு ஏற்பளித்தலும் அவற்றின் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் நிதி ஒப்பளிப்புச் செய்தலும். |
| | (iv) பணியின் தரத்தைப் பற்றி கண்காணித்து மேற்பார்வையிட்டு மாவட்ட ஊராட்சிக்கு முன்னேற்றம் குறித்து அறிக்கை அனுப்புதல். |
| 3. நீர் வழிகள்/தோணித் துறைப் பணிகள் முதலியவற்றை மேம்படுத்துதல். | (i) போக்குவரவு ஒழுங்கு முறைகள் உடன்பட்டிருப்பதை உறுதி செய்வதற்காகச் ஊராட்சிகளால் தேவைப்படும் தோணிகளை/ படகுகளை ஆய்வு செய்தலும், முறையாகத் தோணிப் போக்குவரத்தை அமைத்தல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 4. சாலைச் சுங்க விதிப்பு | (i) | கணிசமான அளவில் நிதி முதலீடு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியச் சாலைகளை/பாலங்களைப் பயன்படுத்தும் பயணிகள்/ஊர்திகள் மீது சாலைச் சுங்கம் விதித்தல். |
| 5 சாலைகளின் வகைப்பாடு | (i) | சாலைகளை வகைப்படுத்தலில் தேவைப்படும் எந்த ஒரு மாற்றங்கள் குறித்தும் மாவட்ட ஊராட்சிக்குப் பரிந்துரை செய்தல். |
| | (ii) | சாலைகளை வகைப்படுத்தல் தொடர்பில் ஊராட்சியின் கருத்துக்கள் கிடைத்ததும், அதனை ஊராட்சி ஒன்றியம் பகுத்தாய்ந்து, நடவடிக்கைக்காகத் தன் கருத்துக்களை மாவட்ட ஊராட்சிக்குத் தெரிவித்தல். |
| 6. நிழல் தரும் மரங்கள் | (i) | நிழல் தரும் மரங்கள்/மலைத் தோட்டப் பயிர்களை அதிக அளவில் வளர்த்தல் ஊராட்சி சாலையில் இப்போதிருக்கும் மரங்களைப் பராமரித்தல், அதிலிருந்து உரிய வருவாயை ஈட்டுதல். |
| 7. சில நேர்வுகளில் தண்டம் விதித்தல் | (i) | ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தொடர்பில் (சட்ட அட்டவணை II மற்றும் III) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் காப்புரைகளை மீறியமைக்காகத் தண்டம் விதித்து அபராதத் தொகைகளைத் திரட்டுதல். |
| 8. (பிரிவு 114 (2) இன் கீழ்) ஊராட்சி ஒன்றியத்தால் நிறைவேற்றபட்டு வரும் அரசுத் திட்டங்களை சீராய்வு செய்தல். | (i) | ஊரகச் சாலைத் திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம், பேருந்து தட மேம்பாட்டுத் திட்டம் இயற்கைச் சீற்றங்களினால் பழுதுபட்ட சாலைகளை (பிரிவு 114(2) இன் கீழ்பழுது பார்த்தல் ஆகியவற்றின் கீழ் செயற்படுத்தப்பட்ட பணிகளை சீராய்வு செய்தல். பணிகளை மேற்கொள்ளல். (நெ.சா.ஊ.ப. கோட்டப் பொறியாளரும் தொடர்புடைய மற்றவர்களும் ஊ.ஒ.தால் சட்டப் பெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்). |

## III. மாவட்ட ஒன்றியம்

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. சாலைப் பின்னலமைப்பு மேம்பாட்டிற்காக மாவட்ட நிலையில் திட்டமிடல். | (i) | அறிவியில் மற்றும் தொழில் நுட்ப விவரங்களைப் பயன்படுத்தி மாவட்டத்திலுள்ள சாலைப் பின்னலமைப்பிற்கான முன்னேறிய. திட்டங்களை முயற்சித்தல். மேலும் அதனை அனைத்து ஊராட்சிகளுக்கும் பரவலாக்குதல். |
| 2. சாலைப் போக்குவரத்து உள்பட சாலைகளின் வகைப்பாடு. | (i) | பொதுச் சாலைகளை (தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என்று |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | அரசால் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் தவிர) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் ஊராட்சிச் சாலைகள் என்று வகைப்படுத்துவது குறித்து அரசுக்கு அறிவுரை கூறல். |
| | (ii) சாலைகள் மற்றும் சாலை போக்குவரத்தின் தரத்தை ஒரு நிலையிலிருந்து உயர் நிலை வகைக்கு மேம்படுத்துவதற்கு அரசுக்கு அறிவுரை கூறல். |
| 3. சாலை மேம்பாட்டுத் திட்டங்களைச் சீராய்வு செய்தல். | (1) சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தையும் சீராய்வு செய்தல். |

## நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள்

07. அனைத்துப் பொறியியல் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு, ஊராட்சி ஒன்றிய நிலையில் இப்போது நிருவாக ஏற்பாடுகள் சாலைத்திட்டங்களின் செயல்முறைத் தேவைகளை எதிர்நோக்கியுள்ளன. பொதுவாகவே, நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையிலிருந்து பொறியாளர்கள் வரவழைக்கப்படுவர். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நிருவாகக்கட்டுப்பாட்டின் கீழ் இத்தகைய பொறியாளர்கள் பணியாற்ற வேண்டியிருக்கும். மாவட்டச் சார்நிலைப் பணிநிலையில் உள்ள (வருவாய்க் கோட்டம்) நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் உதவி கோட்டப் பொறியாளரிடமிருந்தும் கோட்டப் பொறியாளரிடமிருந்தும் இவர்கள் தொழில் நுட்ப அறிவுரையையும், பணிசார்ந்த ஆதரவையும் பெறுவர்.

08. ஊராட்சி ஒன்றிய பொறியாளர் தொகுதிப் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியப் பணிகளைச் செயற்படுத்த வேண்டும் என்பதோடமல்லாமல் ஊராட்சிகளுக்குத் தொழில்நுட்ப அறிவுரைகளையும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும் அதிகார ஒப்படைப்பு குறித்துப் பரிந்துரைக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தில் பணிச்சுமை அதிகமாக உள்ள இடங்களில் கூடுதலாகப் பொறியாளர்கள் தேவைப்படுவர். பொறியாளர்கள் இருவகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதிருக்கும் ; அவை (அ) கட்டுமானம் மற்றும் (ஆ) பராமரிப்பு கட்டுமானப் பணி நடவடிக்கைகள் காலவரையறைக்குட்பட்டவை ; ஆனால் பராமரிப்புப் பணிகள் தொடர்ந்திருப்பவை. பராமரிக்கப்பட வேண்டிய சாலைகள் கட்டிடங்கள் மற்றும் பிற உள்ளமைப்புகளைக் கணக்கில் கொண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தனது பராமரிப்புப் பணியாளர்களை நியமித்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வகையான உள்ளமைப்பு தொடர்பில் தொழில்நுட்பம் மற்றும் நிதி பராமரிப்புத் தரம் பற்றிக்குறிப்பிடுவதற்கு இப்போதுள்ள வழிகாட்டல்கள் புதிதாக்கப் பெறவேண்டும். திட்டங்களை மூலமாகக் கொண்டு, கட்டுமானப் பணிகள் அமைவதால் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் தொழில்நுட்பப் பணியாளர்கள் அயல்பணி முறையில் பணிக்கு வர வேண்டும். இத்தகைய பணிகள் முடிவடைந்ததும், பணியாளர்கள் தத்தம் அரசுத் துறைகளுக்குத் திருப்பி அனுப்பப் பெறலாம். இதன் உள்நோக்கம் யாதெனில் ஒரு குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் ஊராட்சி ஒன்றியங்கள் தமக்கென தொழில்முறைப் பணியாளர்களை பெற்றிருக்க வேண்டும் என்பதுதான். இப்போதுள்ள ஏற்பாடுகளை அகற்ற வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை ; ஆனால் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் தமது தொழில் நுட்பப் பணியமைப்பை வலுப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். எனவே அரசின் அயல்பணி / மாற்றுப்பணி பணியாளர்கள் ஓய்வு பெறும் போதும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் அதன் தொழில் நுட்பப் பணியாளர்கள் நீடித்திருப்பதற்கு நியமனங்களைச் செய்ய வேண்டும். மாவட்ட ஊராட்சிகளுக்கு என போதுமான எண்ணிக்கையில் உதவிக்கோட்டப் பணியாளர் மற்றும் கோட்டப் பணியாளர் பணியிடங்களைச் சேர்ப்பதானது பொருத்தமானதாகும். அதனால் நிலைத்தத் தொழில் நுட்ப அறிவுரைகள் மாவட்ட ஊராட்சியிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடைக்கக்கூடும். குறிப்பிட்ட சில சில திட்டங்களுக்காக (அதாவது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்) ஒப்பளிப்புச் செய்யப் பெற்றுள்ள உதவி கோட்டப் பொறியாளர் பணியிடங்களை மாவட்ட ஊராட்சிகளுடன் இணைக்கலாம்.

09. பல்வேறு அதிகாரக் குழுக்களின் கட்டுப்பாட்டில், சாலைகளைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, அவற்றைப் பராமரிப்பதற்கான பொறுப்பை நிர்ணயிக்கும் திட்டத்தின் மறைந்துள்ள நோக்கம் யாதெனில் தேசிய அளவிலும் மாநில அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்த எல்லாச் சாலைகளையும் போதிய அளவு உயர்ந்த தரத்தில் அரசு பராமரிக்க வேண்டும் என்பதாகும். மேலும், மாவட்டங்களுக்கிடையே அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த பெரும்பாலான சாலைகளை அதன் நிதியிலிருந்து குறிப்பிட்ட தரத்தில் திறம்பட பராமரிக்கப்படுவது போன்று அரசு பராமரிக்க வேண்டும் என்பதாகும். இது மேலும் படிப்படியாக அதிகரிக்கக்கூடும் என எதிர்பாக்கப்படுவதுடன், அரசால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்டப் பெருஞ்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட சாலைகளில் சரியான இடைவெளிகளில் மேலும் கூடுதலாக சாலைகள் இணைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சாலை வகைப்பாடு பற்றிய விவரங்கள் தொடர்பில் அரசுக்கு அறிவுரை வழங்குவதற்கு மாவட்ட ஊராட்சிகள் தான் ஏற்ற நிறுவனங்களாக இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் ஊரகப்பகுதிகளிலுள்ள சாலைகள் அனைத்தையும் அவ்வாறு பராமரிக்க இயலா நிலை தொடருகிறது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட சாலைகளின் பொறுப்பு முறையே ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் இரு கீழ்நிலை அமைப்புகளுக்கு அவற்றிற்குத் தொடர்பாகவுள்ள சாலைகளின் அமைப்பிற்கும் பராமரிப்பிற்கும் போதுமான அதிகாரங்களை அளிக்க இச்சட்டம் வகை செய்கிறது. 245(1) மற்றும் (2)ஆகிய பிரிவுகளின் கீழும், 31, 151, 154, 155 மற்றும் 236 பிரிவுகளிலும் உள்ளவாறு சாலைகளை தொடர்பான சட்டக் கூறுகளை மீறியதற்காக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மேற் குறிப்பிட்ட சட்டத்தின் II மற்றும் III ஆம் அட்டவணையின் படி தண்டம் விதிப்பதற்கு வகை செய்யப் பெற்றுள்ளன. எனினும் இத்தகைய நிதி ஆதாரங்களை வலியுறுத்திப் பெறுவதற்கிடையில் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவது பெரும் இடராகும்.

**நிதிச் சிக்கல்கள்**

10. இவ்வாறாக, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஊராட்சி ஒன்றியத்தாலும் அல்லது ஊராட்சிகளாலும் பராமரிக்கப் பட வேண்டிய சாலைகளின் எண்ணிக்கை பெருமளவில் இருக்கும். புதிய சட்டத்தில் இவ்விரு அமைப்புகளுக்குமான நிதி ஆதாரங்கள் குறித்துத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 182க்கும் பிரிவு குறித்துக் கருத்தில் கொள்ள வேண்டும். இதில் வகை செய்யப்பட்டுள்ள "உள்ளாட்சிச் சாலைகள் மானியம்" ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பராமரிப்பிற்கெனவே குறிப்பிடப்பெற்றதாகும். அத்தகைய சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் என வகைப்படுத்தப்பட வேண்டும் என்பது நோக்கமாகும். இவை வட்டாரங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்தவையாக ஏற்கப்பட்டவையாகும் என்பதுடன் முறையாகப் பேணப்பட வேண்டியவையுமாகும். 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி ஒருவருக்கு 40 காசுகள் வீதம் உள்ளாட்சிச் சாலைகள் மானியம் அளிக்கப்பட்டு வந்தது. 15 ஆண்டுகளுக்கு முன்னர், 1981 இல் இருவகைக் கூறுகளின் முறைப்படி அதாவது (அ) ஒருவருக்கு 18 காசுகளாகவும் (ஆ) சாதாரண பாதை எனில் ஒரு கி.மீக்கு ரூ.535 வீதமும், கடற்கரைச் சாலை எனில் ரூ.715 வீதமும், மலைப் பாதைகளுக்கு ரூ.1340 வீதமும் எனத்திருத்தி அமைக்கப்பட்டது. காலங்கடந்த விலை உயர்வினால், ஒரு மீட்டருக்காக தற்போதைய விலை வீதத்தைத் திருத்தியமைப்பது தேவை எனத் தெளிவாகிறது. நாளைய செயற்பாட்டிற்கான வகை முறைமையை மாநில நிதி ஆணையம் வகுத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 1996–97 ஆம் ஆண்டுக்கென ஒவ்வொரு வகைப்பாதைக்கும் கிலோ மீட்டருக்கான கட்டண வீதம் குறித்து அறுதியிடலாம் எனவும் ஆண்டுதோறும் உயரும் பணவீக்கக் குறைவின் காரணமாக 5% உயர்வளிக்க அனுமதிக்கலாம் எனவும் மாநிலத் திட்டக்குழு பரிந்துரைக்கிறது. மேலும், ஊராட்சிகளுக்குச் சாலை பராமரிப்பிற்காக நிதி அளிப்பது தொடர்பில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் முழு நீளத்தையும் உள்ளாட்சிச் சாலை மானியத்திற்காக கணக்கெடுக்க வேண்டும்.

11 1992–93 லிருந்து 1996–97 வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்ட உள்ளாட்சிச் சாலை மானியங்களின் விவரங்கள் வருமாறு :

| தொடர் எண். (1) | ஆண்டு (2) | அளிக்கப்பட்ட மானியம் ரூபாய் இலட்சங்களில் (3) |
|---|---|---|
| 1. | 1992–93 | 1200 |
| 2. | 1993–94 | 1500 |
| 3. | 1994–95 | 1728 |
| 4. | 1995–96 | 2000 |
| 5. | 1996–97 | 2200 |

ஆதாரம் : ஊரக வளர்ச்சித்துறையின் ஆகஸ்டு '96 செயல் நிறைவேற்ற வரவு, செலவுத் திட்டம்.

உள்ளாட்சிச் சாலை மானியத்தின் 70 விழுக்காடு அளவுத் தொகை பணியாளர்களின் சம்பளம் மற்றும் பிற தொகைகளை வழங்க செலவிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக அந்த சாலைகளில் மேம்பாட்டிற்கும் பராமரிப்பதற்கும் என சிறிய அளவில் நிதி எஞ்சியுள்ளது. மேலும், உள்ளாட்சி சாலைகள் மானியம் அளிக்கும் நிதியானது சற்றொப்பத் தற்காலிக நிதியாகவே அமைவதையும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனச் சாலைகளின் முழுநீளமும் கருதப்படவில்லை என்பதும் கண்டறியப் பெற்றது. உள்ளாட்சி சாலைகள் மானியம் என்பதன் கீழ் 1996–97 ஆம் ஆண்டிற்கு மொத்தமாக அளிக்கக்கூடிய நிதி ரூ. 103.30 கோடிகளாகும் என மாநிலத் திட்டக்குழு வாயிலாக அறியப் பெறுகிறது.